JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146/2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.6** | Prosecution /Defence / Court | |
| Name | **Periyasamy** | Caste | |
| Father's Name | **Sivanadimai** | Calling | |
| Village | **Pachayapuram, Vilathikulam** | Religion | |
| Taluk | **Thoothukudi** | Age | |

**Accused Selvaraj**, **S/o**.**Ramalinga Chettiar present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 20.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து கொண்டு டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். பெத்தாம்பாளையம் நால்ரோட்டில் உள்ள லட்சுமி பேக்கரியில் நான் 01.07.2011ம் தேதியில் நான் டீ மாஸ்டராக வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது அன்றைய தினம் அதிகாலை சுமார் 03.45 மணியளவில் நான் கடைக்கு வெளியே நின்று கொண்டிருந்தேன். அப்போது கோயம்புத்தூர் – சேலம் பைபாஸ் ரோட்டில் TN 10 1771 என்ற பதிவெண் கொண்ட காரை செல்வராஜ் என்பவர் ஓட்டி வந்தார்.

**2)** விபத்து நடந்து 13 வருடங்கள் ஆகிவிட்டதால் செல்வராஜை தற்போது என்னால் அடையாளம் காட்ட இயலாது. (**எதிரி ஆஜரில் இருந்தும் சாட்சி எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை**.) மேற்படி பதிவெண் கொண்ட காரை செல்வராஜ் வேகமாக ஓட்டி வந்து சென்டர் மீடியம் மீது மோதி வண்டி தலை குப்புற விழுந்து விபத்து ஏற்பட்டது. இதை பார்த்து நான் அங்கு சென்று பார்த்தபோது வண்டியின் முன் பாகத்தில் தீ பிடித்திருந்தது. எனது ஓனர் ராமசாமி பேக்கரி கடையில் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்பி நானும்,

ராமசாமியும் பின்னர் மற்ற வாகனங்களில் வந்தவர்களும் சேர்ந்து காரில் விபத்துக்குள்ளானவர்களை மீட்டு வெளியே படுக்க வைத்தோம். அதில் கீதா என்பவருக்கு பலத்த அடிபட்டு உடல் முழுவதும் ரத்தமாக இருந்தது. அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். எனது ஓனர் ராமசாமி 108 ஆம்புலன்ஸ்சுக்கு போன் செய்தார்.

**3)** 108 ஆம்புலன்ஸ் வந்து கீதாவை பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். மற்ற அடிபட்டவர்களை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பெருந்துறை அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் கீதாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** விபத்து நடந்த ரோடு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு நான்கு ரோடு சந்திக்கும் ரோடு என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடபுறமாக பெத்தாம்பாளையம் செல்லும் பிரிவு ரோடு செல்கிறது என்றால் சரிதான். பெத்தாம்பாளையம் பிரிவு ரோட்டிற்கு மேபுறமாக நான் வேலை செய்யும் லட்சுமி பேக்கரி உள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு முன்பாக விபத்தில் சம்மந்தப்பட்ட கார் எந்த திசையில் இருந்து வந்தது என்றால் அது எனக்கு தெரியவில்லை.

**2)** லட்சுமி பேக்கரியில் டீ போடும் இடம் பேக்கரியின் பின்பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. முன்பகுதியில்தான் உள்ளது. நான் டீ போடும்பகுதி கடையின் முன்பகுதியில் உள்ளது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சத்தம் கேட்ட பின்னர்தான் நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில்

**பார்க்கவில்லை என்றும் நேரில் பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **146/2012** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.7** | Prosecution /Defence / Court | |
| Name | **Yuvaraj** | Caste | |
| Father's Name | **Krishnasamy** | Calling | |
| Village | **V.N.Road, S.V.Colony** | Religion | |
| Taluk | **Tirupur** | Age | |

**Accused Selvaraj, S/o.Ramalinga Chettiar present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 20.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து கொண்டு சொந்தமாக கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரி செல்வராஜ் எனது பெரியப்பா மகன் ஆவார். கடந்த 01.07.2011ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தபோது விடியற்காலை 04.00 மணிக்கு ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து கோயம்புத்தூர் – சேலம் பைபாஸ் ரோட்டில் பெத்தாம்பாளையம் பிரிவு ரோட்டில் ஆஜர் எதிரியும், கீதா, ருக்மணி, வீராச்சாமி, பழனிச்சாமி ஆகியோர்கள் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டு அதில் ருக்மணி, வீராச்சாமி, பழனிச்சாமிஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், கீதாவுக்கு பலத்த அடிபட்டு மயக்கம் ஏற்பட்டு இருப்பதாகவும் பெருந்துறை கே.எம்.சி. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று கொண்டிருப்பதாகவும் எனக்கு தகவல் சொன்னார். உடனே நான் எனது குடும்பத்துடன் கிளம்பி பெருந்துறை கே.எம்.சி. மருத்துவமனைக்கு வந்தபோது காயம்பட்டவர்களை ஈரோடு லோட்டஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாகவும், கீதா இறந்துவிட்டதால் அவரது பிரேதத்தை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு

சென்றிருப்பதாகவும் எனக்கு தகவல் சொன்னார்கள். பெருந்துறை அரசு மருத்துவமனை சென்று பார்த்தோம். இது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு பெருந்துறை போலீசார் கீதாவின் பிரேதத்தை பெருந்துறை அரசு மருத்துவமனையில் வைத்து பார்வையிட்டு பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

.